செய்தி வெளியீடு எண்: 546 நாள் : 09.10.2013

# செய்தி

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில் மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் சரகத் துணைப்பதிவாளர்கள் ஆய்வுக் கூட்டம்**

- **அனைத்து செயல்பாடுகளில் கூட்டுறவுத்துறை முதலிடம் வகிக்கும் வகையில் அலுவலர்கள் செயல்பட அறிவுரை**
- **10,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் நகர கூட்டுறவு வங்கிகளிலிருந்து சிறுதொழில், பண்ணைசாரா மற்றும் வணிக கடன் பெற தலா ரூ.2500 வீதம் பங்குமூலதனமாக வட்டியில்லா கடனாக ரூ.2.50 கோடி உடனடியாக வழங்க உத்தரவு**
- **கூட்டுறவு பண்ணைப் பசுமை நுகர்வோர் காய்கறிகடைகள்மூலம் 7.10.2013 வரை 1793 டன் காய்கறிகள் ரூ.4.99 கோடிக்கு விற்பனை**
- **கூட்டுறவு வங்கிகள் அரசின் திட்டங்கள் மற்றும் அறிவிப்புகள் அனைத்தையும் நடைமுறைப்படுத்தும் பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு செயல்படுவதற்கு பாராட்டு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில் மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் சரகத் துணைப்பதிவாளர்கள் ஆய்வுக் கூட்டம் இன்று (9.10.2013) சென்னை, அண்ணாநகரில் உள்ள நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலைய கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகையில், ‘‘மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 97வது திருத்தத்திற்கு இனங்க தமிழ்நாடு கூட்டுறவு வரலாற்றில் முதன் முறையாக, நியாயமாகவும், ஜனநாயக முறைப்படியும், அனைத்து கூட்டுறவு அமைப்புகளுக்கும் தேர்தல் நடத்தி தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களை ஒரு வலிமையான ஜனநாயக அமைப்புகளாக மீண்டும் செயல்படும் வண்ணம் 2,04,889 தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள், கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று, நடத்தி கொண்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.

கூட்டுறவுத்துறை மானியக் கோரிக்கையின்போது, அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மீதான முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டு எஞ்சியுள்ள பணிகளை விரைந்து முடிக்குமாறும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் சட்டமன்ற பேரவை விதி எண். 110ன் கீழ் அறிவித்த அறிவிப்புகளின் செயலாக்கம் குறித்தும், வருங்காலங்களில் செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வினை மேற்கொண்டார்.

மக்களின் பேராதரவைப்பெற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்அம்மா அவர்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களை எளிதில் அணுகி கடன் பெற இயலாத சிறு, குறு விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் பயிர்க்கடன் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். 2012–13ம் நிதியாண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் 4500 கோடி பயிர் கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் 30.9.2013 வரை ரூ.2,038.88 கோடி வழங்கப்பட்டுள்ளது. இப்பயிர்க்கடனில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் பிரிவினருக்கு ரூ.900 கோடி அளவிற்கு வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் ரூ.243.79 கோடி இதுவரை வழங்கப்பட்டுள்ளன. முதலீட்டுக் கடனாக ரூ.300 கோடி வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் இதுவரை ரூ.63.71 கோடி அளவிற்கு வழங்கப்பட்டுள்ளன. கடனை உரிய நேரத்தில் முழுமையாக திருப்பிச் செலுத்தக் கூடிய விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வட்டி மானிய உதவிக்காக ரூ.160 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்குத் தேவையான சான்றளிக்கப்பட்ட விதைகள் கிடைத்திடவும், தடையின்றி உரங்கள் கிடைத்திடவும், வேளாண் மருத்துவ பயன்பாட்டு மையங்கள் மூலம் மண் பரிசோதனை, நீர்ப்பரிசோதனை

மேற்கொள்ளவும், பொது சேவை மையங்கள் மூலம் கிராமப்புற மக்களுக்கும் கணினி சேவை வழங்கிடவும் ஏழை, எளிய மக்களுக்கு கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் தரமான மருந்துகள் நியாயமான விலையில் கிடைத்திடவும் வேளாண் சேவை மையங்கள் மூலம் குறைந்த வாடகையில் வேளாண் கருவிகள் அளித்தல் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

பயிர் உற்பத்தித்திறனை உயர்த்துதல், அறுவடைக்கு பிந்தைய மேலாண்மை, சேமிப்பு கிடங்கு வசதிகள் பெருக்குதல், விற்பனை கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் ஆகியன அரசின் முக்கிய திட்ட பணியாகும். விவசாயிகளின் விளைப்பொருள்களுக்கு நியாயமான விலை கிடைப்பதற்கும், அதன் வாயிலாக தனிநபர் வருமானம் உயர்வதற்கும், மாண்புமிகு அம்மா அவர்கள் வழிவகை செய்துள்ளார்கள். விவசாய பெருமக்கள் தங்களது விளைபொருள்களை இயற்கை சீற்றங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள 1104 சேமிப்பு கிடங்குகள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 810 சேமிப்பு கிடங்குகள் முழுமையாக கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. இதில் 238 சேமிப்பு கிடங்குகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 572 கிடங்குகள் விரைவில திறந்து வைக்கப்படவுள்ளது.

சுயஉதவிக் குழுக்களுக்கு நடப்பாண்டில் ரூ. 200 கோடி அளவிற்கு கடன்வழங்க குறியீடு நிர்ணயக்கப்பட்டதில் இதுவரை 148.53 கோடி அளவிற்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்த 10,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் நகர கூட்டுறவு வங்கிகளிலிருந்து சிறுதொழில், பண்ணைசாரா மற்றும் வணிக கடன் பெற தலா ரூ.2500 வீதம் பங்குமூலதனமாக வட்டியில்லா கடனாக ரூ.2.50 கோடியை உடனடியாக வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

பொதுமக்கள் பயனுறும் வண்ணம் வைப்புத்தொகைகளுக்கு அதிகவட்டி கிடைக்கும் வகையில் வட்டி விகிதம் மாற்றப் பட்டு, தமிழ் நாட்டில் உள்ள அனைத்து கூட்டுறவு வங்கிகளும் வைப்புத் தொகை சேகரிக்கும்முகாமை நடத்தி வருகின்றன. அவ்வகையில் ரூ.18,857. 80 கோடி வைப்புத் தெகையாக உள்ளது. கூட்டுறவு வங்கிகள் அரசின் திட்டங்கள் மற்றும் அறிவுப்புகள் அனைத்தையும் நடைமுறைபடுத்தப்படும் பணியில் தன்னை அர்பணித்துக்கொண்டுள்ளதற்கு பாராட்டுதலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

விவசாயிகளையும் நுகர்வோர்களையும் இணைக்கும் கூட்டுறவு பண்ணைப் பசுமை நுகர்வோர் காய்கறிகடைகள்மூலம் 7.10.2013. வரை 1793 டன் காய்கறிகள் ரூ.4.99 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

பொது விநியோகத் திட்டத்தை நடைமுறை படுத்துவதில் கூட்டுறவு சங்கங்களும் கூட்டுறவு நிறுவனங்களும் பெரும் பங்காற்றி வருகின்றன. குடும்ப அட்டைதாரர்களின் விருப்பத்தின் பேரிலும் அவர்களின் தேவையின் அடிப்படையிலும் மட்டுமே பொருள்கள் விநியோகம் செய்யப்பட வேண்டும். குடும்பஅட்டைதாரர்கள் கேட்கும் பொருள்களை உடனுக்குடன் வழங்க வேண்டும், அனைத்து பொருள்களும் ஒட்டுமொத்தமாகத்தான் வாங்கவேண்டும் என கட்டாயபடுத்தக்கூடாது என அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை செயலாளர் திருமதி. எம். பி நிர்மலா, இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு. பெ. சீத்தாராமன், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு. இரா. கார்த்திகேயன், திரு. கே. இராஜேந்திரன், திரு. ம.ப.சிவன் அருள், திருமதி. கா. பிரமிளா, திரு. இராம ஜெயம் பாண்டியன், திருமதி. வெ.நந்த குமாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**